# தூய லூர்து அன்னை ஆலயம்

50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com

31~12~2017 திருக்குடும்ப விழா (இரண்டாம் ஆண்டு)



# பங்குமக்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**- பங்கு தந்தையர்**

## புத்தாண்டு திருப்பலி நேரங்கள்

**புத்தாண்டு இரவு திருப்பலி நேரங்கள்**

இரவு 09:00 : ஆங்கிலத்தில் திருப்பலி
இரவு 11:00 : தமிழில் நன்றி வழிபாடு
இரவு 11:30 : தமிழில் புத்தாண்டு திருப்பலி

**திங்கள் புத்தாண்டு விழா, 01 - 01 - 2018**

காலை 08:15 : ஆங்கிலத்தில் செபமாலை
காலை 09:00 : ஆங்கிலத்தில் திருப்பலி
காலை 10:30 : தமிழில் திருப்பலி



## பொது விடுமுறை - திங்கள், 01 - 01 - 2018 (புத்தாண்டு)

* பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை
*நுழைவு வாயில் இரும்பு கதவுகள் (Main Gates) மதியம் 12 மணி முதல் மூடப்பட்டிருக்கும்.

## நற்கருணை ஆராதனை வழிபாடு



நாள் : 07~01~2018, ஞாயிறு
நேரம் : மாலை 5:00 மணி



திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## விவிலியப் பகிர்வுக் குழு நற்கருணை ஆராதனை வழிபாடு

நாள்: 07~01~2018, ஞாயிறு
நேரம் : காலை 11:30 மணி
இடம் : புனித பெர்னதெத்து அறை

பங்கேற்று இறை ஆசீர் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

# சிந்தனை

இன்று திருக்குடும்ப விழாவைக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு குடும்பமும் ஆண்டவர் இயேசுவின் ஆசிபெற்ற குடும்பமாக விளங்க இன்று சிறப்பாக மன்றாடுவோம். குடும்பங்கள் பலவிதமான சிக்கல்களைச் சந்திப்பதை இன்று பார்க்கிறோம். மண முறிவுகள், பிளவுகள், ஊடகங்களின் தாக்கத்தால் அறநெறிச் சிக்கல்கள் போன்றவை குடும்பத்தின் ஆணி வேரையே அசைத்துப் பார்க்கின்றன. திருமணம் செய்யாமல், குடும்ப வாழ்வுக்குள் நுழையாமல் விருப்பம்போல் வாழலாம் என்னும் மனநிலை மெல்ல மெல்ல பரவி வருகிறது. எனவே, குடும்பங்களை உறுதிப்படுத்தும் பணியை நாம் அக்கறையுடன் ஆற்றவேண்டும்.

குடும்பங்கள் ஆன்மீகம் நிறைந்தவையாகத் திகழ்ந்தால்தான், இன்றைய சவால்களைச் சந்திக்க முடியும். இந்த குடும்பங்களின் ஆன்மீகம் இறைநம்பிக்கை, நற்பணி, நல்லுறவு, நற்செய்தி அறிவிப்பு என்னும் நான்கு தளங்களில் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் நாள்தோறும் செபித்து, இறைவார்த்தையின்படி, அருள்சாதனங்களில் பங்கேற்று வாழ்வதே இறைநம்பிக்கையின் வெளிப்பாடு. தங்கள் கடமைகளை நேர்மையுடனும், கடமை உணர்வுடனும் நேர்த்தியாக ஆற்றுவது நற்பணியின் வெளிப்பாடு. பல்வேறு விதமான உறவுகளில் பாராட்டு, மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், இழத்தல் போன்ற பண்புகளில் வளர்வது உறவின் வெளிப்பாடு. இறுதியாக, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிக்கும் கடமையுடையவர்கள் என்னும் நிலையில், தங்களால் இயன்ற விதத்தில் நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்வது நற்செய்தி அறிவிப்புப் பணியின் வெளிப்பாடு. இந்த நான்கு தளங்களிலும் நிறைவு பெறும் குடும்பங்களே ஆன்மீகம் நிறைந்த குடும்பங்களாக விளங்க முடியும். இந்த நாளில் நமது குடும்பங்கள் அனைத்தும் இத்தகைய ஆன்மீக குடும்பங்களாகத் திகழ இறைவனை வேண்டுவோம்.

## நன்றியின் விழா - பொங்கல் விழா கொண்டாட வாரீர்!

வாழ்வின், விளைவின் காணிக்கையை கடவுளுக்கு நன்றிபலியாக்க வாரீர். அப்போஸ்தலர்கள், இயேசுவோடு இணைந்து ஒப்புக்கொடுத்தது போல், 24 பொங்கல் பானைகளை அடையாளமாக்கி **21-01-2018 அன்று மாலை 4.30 மணிக்கு** நமது ஆலயத்தில் நன்றி பலியாக ஒப்புக் கொடுப்போம். தொடர்ந்து வழக்கம் போல் மாலை 6.30 மணிக்கு திருப்பலி உண்டு.



எல்லோருக்கும் விலைமதிப்பில்லாத இயேசுவின் பொங்கல் பானையுடன் இணைந்து கொண்டாட வாய்ப்பு உண்டு. எனவே விரும்புவோர், பங்கு அலுவலகத்தில் உங்கள் காணிக்கையாக $100 வெள்ளிகள் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.

## முழு இரவு ஜெப வழிபாடு

வருகின்ற ஜனவரி மாதம் 13ஆம் தேதி, இரண்டாவது சனிக்கிழமை இரவு 9.30 மணி முதல் மறுநாள்காலை 5.30 மணி வரை முழு இரவு ஜெப வழிபாடு நடைபெறும். கலந்து கொண்டு தூய ஆவியின் கனிகளை, கொடைகளை பெற்றுக் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## இடைவிடா சகாய மாதா நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை

ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணிக்கு நம் தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும். நம்முடைய பங்கு மக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யை | கை | க் | டி | ப | ன் | ட | உ | ரு | மை |
| க | க் | ஆ | டை | க | பை | அ | ங் | லி | ன |
| ரி | பி | வா | ரு | ன் | று | மா | வ | ட் | ஞா |
| தி | ம் | ம் | க் | ம | டா | சி | று | ண் | யி |
| எ | ந | பே | ந | க | ட் | ஞா | பே | வி | ன் |
| தீ | தை | இ | மா | ன் | ளி | ன | ப் | ழி | க |
| அ | டு | ய | மோ | ரு | ப் | த் | லை | கு | அ |
| அ | ட | ச | க | டை | ந் | தா | த | ய | ர |
| கே | ற | த | ந் | றை | நி | ல் | ர் | வ | சு |
| டு | ரு | து | ரை | தோ | ந் | ற | இ | டு | ர் |

1. ஆபிராம் ஆண்டவர் மீது __________ கொண்டார்.
2. ஆபிராம்! அஞ்சாதே. நான் உனக்குக் __________ இருப்பேன்.
3. ஆண்டவர் தம் __________ என்றென்றும் நினைவில் கொண்டுள்ளார்.
4. இவ்விறுதி நாள்களில் தம் __________ வழியாக நம்மிடம் பேசியுள்ளார்.
5. ஏனெனில் __________ நம்பிக்கைக்குரியவர் என அவர் கருதினார்.
6. __________க் கடவுள் உயிரோடு எழுப்ப வல்லவர்.
7. ஆண் __________ அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்.
8. குழந்தையும் வளர்ந்து __________ பெற்று, __________ நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது.

## ஞாயிறு வாசகங்கள்



முதல் வாசகம்: தொடக்க நூல் 15:1-6;21:1-3

பதிலுரைப்பாடல்: 105:1-2.3-4.5-6.8-9

பதிலுரை: ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொண்டுள்ளார்.

இரண்டாம் வாசகம்: எபிரேயர் 11:8,11-12,17-19

வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். அல்லேலூயா!

நற்செய்தி வாசகம்: லூக் 2:22-40

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை | : சனி மாலை 8:30 மணி |
| | முழு இரவு ஜெப வழிபாடு | : மாதத்தின் இரண்டாவது சனி இரவு 9.30மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**